பக்கங்கள் 6 விலை சதம் 30 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

மலர்: 18 தை 12 ஸபர் 4 இதழ்: 345

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-1-77

## ரயில்பாதை சீரானால் இன்று வழமைபோல் ரயில் ஓடும்!

யாழ்ப்பாணம், செவ். ஆனைவிழுந்தானில் நேற்று முன் தினம் சரக்கு வண்டியொன்று தடம் புரண்டதால் ரயில் சேவையில் ஏற்பட்ட தடங்கல் இன்று சீராகும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த விபத்து காரணமாக கொழும்பு செல்லும் ரயில் வண்டி பளையில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து பிரயாணிகள் பரந்தன் வரை பஸ்ஸிலும் கொழும்பிலிருந்து வரும் பிரயாணிகள் பரந்தனிலிருந்து பளைவரை பஸ்ஸிலும் பிரயாணம் செய்து பின்னர் ரயிலில் ஏறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இன்று காலை முதல் வழமை போல் ரயில் வண்டிகள் ஓடும்.

(6-ம் பக்கம் பார்க்க)

"மக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த

# தேர்தல் நடத்தப்படும்"

# பிரதமர் சிறிமா உறுதி!

## பயமுறுத்தலுக்கு அஞ்சி

### பேரவையைக் கலைக்கமாட்டாராம்

கொழும்பு, திங்கள்

"வேலைநிறுத்தம் மேற்கொள்வது போன்ற அச்சுறுத்தல்களால் நாம் கிலேசமடைந்து தேசிய அரசுப் பேரவையைக் கலைத்துவிடப் போவதில்லை. ஆனால் பொதுமக்கள் தம் வாக்குரிமையைப் பயன்படுத்தும் வகையில் பொதுத்தேர்தல் நடத்தப்படும்" என்று பிரதமமந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உறுதியளித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வியாங்கொடை பஸ் நிலையத் திறப்பு விழா ஒன்றில் பேசுகையிலேயே பிரதமர் இந்தவாக்குறுதியை அளித்தார்.

பிரதமமந்திரி தமது உரையில் மேலும் சொன்னதாவது: "இவ் வெளிநாட்டு சக்திகள் பாரதத்தில் தமது கைவரிசையைக் காட்ட முற்பட்டு அவை பாரதம் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மேற்கொண்ட கடும் நடவடிக்கைகளால் தோல்வியில் முடிந்ததால் அச்சக்திகள் இலங்கையில் தலைகாட்ட முயல்கின்றன. இங்குள்ள அரசியல்வாதிகளையும் தொழிலாளர்களையும் தம் கைப்பொம்மைகளாகப் பயன்படுத்தி நாட்டில் சீர்குலைவை ஏற்படுத்துவதே இவற்றின் நோக்கமாகும். இவை குறித்து நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இலங்கையில் தம்மை சோஷலிஸவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் பொது மக்களைப்பற்றியே யோசிக்காமல் தொழிலாளர்களை தவறான வழியில் இட்டுச் செல்ல முற்பட்டுள்ளார், தொழிற்சங்கத் தலைவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு வேலைநிறுத்தத்தை அடிப்படையாக வைத்து செயற்பட்டால் வழங்கப்பட்ட சலுகைகளை இழக்க வேண்டி நேரிடும். வேலைநிறுத்த நடவடிக்கைகளால் நாட்டில் பொருட்களுக்கு துணிகள் உட்பட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு தேங்காயின் விலை 1 ரூபா 50 சதமாக உயர்ந்துள்ளது. காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்து வைத்தார். அவ்விதமே தமது அரசாங்கமும் செய்கிறது. ரயில்வே உட்பட அரச கூட்டுத்தாபனங்களிலும் அரசாங்க திணைக்களங்களிலும் சேவை புரியும் ஊழியர்கள் பெருந்தொகையினர் அல்ல. நாட்டின் மொத்த ஜனத்தொகை 1 கோடி 40 லட்சம் பேர். இதில் 90 சதவீதமானோர் விவசாயிகள்.

ஒரு சிறு தொகை அரசஊழியருக்காக நாட்டின் பெரும்பான்மையான பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அவர்களை மட்டும் திருப்திப்படுத்துவது சாத்தியமில்லை. அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களிலும் ரயில்வேப்பகுதிக்கு மட்டும் நாளாந்தம் பத்து லட்

[5-ம் பக்கம் பார்க்க]

## செலாவணி மோசடி: முதல் எதிரி இந்தியாவில்

கொழும்பு, திங்கள்

10 லட்சம் ரூபாய் செலாவணி மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் எஸ். கணேசலிங்கம், சோமசேகரம் ஆகிய இருவர் மீதான வழக்கு விசாரணை இன்று குற்றவியல் விசாரணைக் கமிஷன் முன் ஆரம்பமாயிற்று.

முதல் எதிரி திரு. கணேசலிங்கம் இந்தியாவிலிருப்பதாக உளவு பொலிசார் தமக்கு அறிவித்திருப்பதாக அரச தரப்பு வழக்கறிஞர் கமிஷன் முன் தெரிவித்தார். இரண்டாம் எதிரி யாழ்ப்பாணத்திலிருப்பதாகவும் இந்த பண மோசடி தொடர்பான கணக்கு விபரம் இலண்டனிலிருப்பதாகவும் அவர் சொன்னார்.

முதலாம் எதிரி சமூகமளிக்காத நிலையிலேயே விசாரணை நடைபெற விருக்கும் இந்த வழக்கு மீண்டும் அடுத்தமாதம் 14-ம் திகதி எடுக்கப்படும்.

## பேராசிரியருக்கு அஞ்சலி; யாழ். வளாகம் விடுமுறை

யாழ்ப்பாணம், செவ். மறைந்த பேராசிரியர் பே. கனகசபாபதியின் தகனக் கிரியைகள் இன்று காலை ஏழாலையில் நடைபெறவிருக்கின்றது.

பேராசிரியர் பே. கனகசபாபதியின் மறைவுக்கு அஞ்சலிசெலுத்துமுகமாக யாழ். வளாகத்துக்கு இன்று(செவ்வாய்க்கிழமை) விடுமுறை அளிக்கப்படுகிறது என்று வளாகத் தலைவர் பேராசிரியர் கே. கைலாசபதி அறிவித்துள்ளார்.

மறைந்த பேராசிரியரின் ஆத்ம யாத்திரையில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு இந்து மாணவர் சங்க முன்னாள் தலைவர்கள் சு. சண்முகநாதன், நா. பத்மநாதன், க. கிருஷ்ணானந்தசிவம் ஆகியோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் பேராதனை முன்னாள் மாணவர்கள் மற்றும் இந்து மன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் கேட்டுள்ளனர்.

## ஒருமொழிச் சட்டம் வந்ததின் காரணம்!

### நேமிநாதன் விளக்கம்

திருகோணமலை, திங்கள்

ஆங்கிலத்தைப் படித்த இலங்கைத் தமிழர்கள் சகல துறைகளிலும் முன்னேறி வருவதைக் கண்டு பொறுக்க முடியாதவர்கள்தான் ஒருமொழிச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன் பயனாக தமிழ்மக்கள் சகல துறைகளிலும் நசுக்கப்படுகின்றனர் என்று திருகோணமலை தேசியப்பேரவை உறுப்பினர் திரு. நேமிநாதன் இன்று நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் கருத்தரங்கில் 'ஒரு மொழிச் சட்டமும் நாமும்' என்ற தலைப்பில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 1956-ம் ஆண்டு தொடக்கம் நாம் இந்த ஒரு மொழிச் சட்டத்தை எதிர்த்துவருகின்றோம். பின்னர் மாபெரும் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தி தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகம் அறியச் செய்தோம். தமிழ்மக்கள் ஒடுக்கப்படுவதை நிறுத்தும்பொருட்டு பல தடவைகள் அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுநடத்தினோம். ஆனால் அவைகளுக்கு யாருமே செவிசாய்க்காது போனதால் நமக்கென ஒரு தேசத்தை உருவாக்குவதென்று முடிவுசெய்தோம் என்றார்.

இந்தக் கருத்தரங்கில் மூதூர் இரண்டாவது எம். பி. திரு. தங்கத்துரையும் கலந்துகொண்டார். எனினும் சுகயீனம் காரணமாக அவர் பேசவில்லை. கூட்டத்துக்கு தலைமைவகித்த திரு. த. ஸ்ரீஸ்கந்தராசா பேசும்போது தமிழர் கூட்டணியில் இளைஞர்பேரவை ஒரு அங்கமாக இருந்தபோதிலும் கூட்டணி சொல்வதற்கெல்லாம் நாம் 'ஆமாம்' போட வேண்டுமென்பதில்லை. கூட்டணித் தலைவர்கள் விடும் தவறுகளை சுட்டிக்காட்டி

(6-ம் பக்கம் பார்க்க)

## கல்லூரி நேர அட்டவணை

யாழ்ப்பாணம், செவ்வாய் மிக்க வைத்தியநாதப் பதிப்பகத்தார் இலவசமாக வழங்கும் கல்லூரி நேர அட்டவணை நாளை 'ஈழநாடு' பத்திரிகையுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

மெற்றலிக்ஸ்'

கணித உபகரணங்கள் ('METALIX' Mathematical Instruments) எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சிடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட்

151, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 507

5319

## அம்புலன்ஸ் படகு பழுது நோயாளர் அவதி!

யாழ்ப்பாணம், செவ்வாய்

அவசர சிகிச்சைக்காக நோயாளர்களை நெடுந்தீவில் இருந்து யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்பட்டுவந்த அம்புலன்ஸ் மோட்டார்ப்படகு அதன் சேவையைப் பல வருடங்களாக நிறுத்திக்கொண்டமையினால் அப்பகுதியிலுள்ள மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக இப்படகு பழுதடைந்திருந்தும் இன்றுவரை அதன் திருத்த வேலைகள் இடம்பெறவில்லை. இந்தப் படகைப் புன

(6-ம் பக்கம் பார்க்க)

# மத்திய அரசில் சகலருக்கும் பங்கு; நீதி, பத்திரிகைத் துறையில் சுயாதீனம்

## இதுவே இந்திய எதிர்க்கட்சிக் கூட்டமைப்பின் கொள்கை

புதுடில்லி, ஜன 24

நீதித்துறை, பத்திரிகைத்துறை ஆகியவற்றில் சுயாதீனத்தை நிலைநாட்டுவதும் மத்திய ஆட்சியை சகலருக்கும் பகிர்ந்தளிப்பதுமே ஜனதா கட்சியின் நோக்கம் என்று திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார்.

திரு. மொரார்ஜி தலைமையிலான ஜனதா எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டபின்னர் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையிலேயே திரு. ஜெயப்பிரகாஷ் மேற்கண்டவாறு கூறினர்.

ஜனதா கட்சி சர்வாதிகாரத்துக்கு எதிரானது என்றும் தெரிவித்த ஜெயப்பிரகாஷ் ஜனதாக் கட்சியின் கொள்கை காந்தியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்றும் கூறினர்.

பொருளாதாரக் குற்றம் புரிந்தவர்களைத் தவிர்ந்த சகல அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்ய வேண்டுமென்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கக் கட்சிக்குப் போன்று சகல எதிர்க்கட்சிகளுக்கும் வானொலியிலும் போதிய இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்கள் உட்பட பல தீர்மானங்கள் இன்றைய கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (உ)

## ஜனதா கட்சியின் தேசியக்கமிட்டி: மொரார்ஜிதேசாய் தலைவர்

புதுடில்லி, ஜன. 24

இந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணியான ஜனதாக்கட்சி முன்னுள் உதவிப் பிரதமரும், அண்மையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டவருமான திரு. மொரார்ஜி தேசாயின் தலைமையில் 27 உறுப்பினர்களைக் கொண்ட தேசியக் கமிட்டியொன்றை நியமித்துள்ளது.

திரு. சுவர்ண்சிங் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. அத்வானி உட்பட மூவர் இக்கட்சியின் செயலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். [உ]

## உ. பி. யில் போட்டியிட சஞ்சேய் காந்திக்கு அழைப்பு

புதுடில்லி, ஜன. 23

உத்தரப்பிரதேசத்தின் எந்தத் தொகுதியிலாவது லோகசபைத் தேர்தலில் போட்டியிடுமாறு உத்தரப்பிரதேச காங்கிரஸ் கட்சி திரு. சஞ்சேய் காந்தியைக் கேட்டுள்ளது. (உ)

## வால்ட்ஹெய்ம் எகிப்துக்கு விஜயம்செய்வார்

வாஷிங்டன், நவ. 24

ஐக்கியநாடுகள்சபைபொதுச் செயலாளர் டாக்டர் வால்ட்ஹெய்ம் அடுத்தமாதம் எகிப்துக்கு விஜயஞ்செய்யவிருக்கிறார்.

அவர் டமாஸ்கஸ், பெய்ரூட், டெல்அவிவ் ஆகியவைகளுக்கும் விஜயஞ்செய்வார்.

மத்திய கிழக்குப் பிரச்னை தீர்வுகாண்பதற்கு ஜெனிவா மாநாடு கூட்டப்படவேண்டியதன் அவசியம் குறித்து மேற்படி நாட்டுத் தலைவர்களிடம் அவர்வலியுறுத்துவார். (ஸ்ரீ)

## லண்டனில் இலங்கை வரி அலுவலர்

லண்டன், ஜனவரி, 24

எழுச்சி வளரும் நாடுகளைச் சேர்ந்த 11 வரித்துறை அலுவலர்கள் கடந்தவாரம் லண்டனில் ஐந்துமாதப் பயிற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களில் இருவர் இலங்கையைச் சேர்ந்தவர்களாவர். ஒருவர் கொழும்பைச் சேர்ந்த திருமதி எம். ஜெகசோதி. மற்றவர் மொரட்டுவையைச் சேர்ந்த திருமதி ஈ. ஓ. டி. சில்வா. வரிமதிப்பீட்டாளர்களான இவர்கள் லண்டனில் உள்ள உள்நாட்டு இறைவரிச் சபையில் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர். (உ)

## திருட்டுப்போன நகைகள் மீட்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம்முதலாம்குறுக்குத்தெருவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்பவர் தமது வீட்டில் இடம்பெற்ற திருட்டு தொடர்பாகச் செய்து கொண்ட புகாரைத் தொடர்ந்து அவரது மைத்துனர் என்று கருதப்படும் எஸ். சந்திரசேகரம் என்பவர் கைது செய்யப்பட்டு நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டு 500 ரூபாய் உத்தரவாதத்தில் விடப்பட்டார்.

திருட்டுப்போன நகைகள் விற்கப்பட்டிருந்த இடத்திலிருந்து மீட்கப்பட்டு விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை சார்ஜன்ட் திரு. ரொட்ரிகோ நடத்தினர்.

களவுபோனதாகக் கருதப்படும் ரூ. 1200 பெறுமதியான நகைகளையும் சார்ஜன்ட் ரொட்ரிகோ மீட்டுள்ளார்.

...

## மருந்து தட்டுப்பாடு நோயாளர் அவதி

பண்டத்தரிப்பு, திங்.

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, பெரியவிளான் பகுதி மக்களுக்கான ஒரே ஒரு அரசினர் வைத்தியசாலையான பண்டத்தரிப்பு அரசினர் கிராம வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலைக்கு தினசரி வரும் பெருந்தொகையான நோயாளர்கள் தங்கள் நோய்க்கேற்ற மருந்துகளைப் பெற முடியாது ஏமாற்றத்துடன் செல்கின்றனராம்.

காய்ச்சலுக்கு உபயோகிக்கப்படும் அஸ்பிரின் குளிகைகள் உட்பட பென்சிலின் ஊசி மருந்து, ஏற்பு தடுப்பு ஊசி மருந்து என்பனவும் இங்கு இல்லாத காரணத்தால் தனி

[6-ம் பக்கம் பார்க்க]

### கங்கை நீர்ப்பிரச்னை:

## பங்ளாதேஷ்-பாரத பேச்சுவார்த்தை தோல்வி

புதுடில்லி, ஜன. 24

கங்கை நீர்ப் பிரச்னை தொடர்பாகப் பங்களாதேஷ் குழுவுக்கும், பாரதக் குழுவுக்குமிடையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

"இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்கமுடியாது போனதையிட்டு வருந்துகிறோம்" என்று பாரத அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட பங்களாதேஷ் குழு நேற்று டாக்கா திரும்பியது.

இக்குழுவினரை விமானநிலையத்தில் பாரதக் குழுவின் தலைவரான மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராமும் ஏனைய அதிகாரிகளும் வழியனுப்பி வைத்தனர். [ஸ்ரீ]

### றொடீஷியப் பிரச்னை:

## ஜெனிவா சமாதான மாநாட்டு தலைவர் இயன்ஸ்மித்துடன் பேசுவார்

லேசாபுட்டு, நவ. 24

வடஇழக்கு றொடீஷியாவில் நீறொடீஷியவிவகாரம்தொடர்பாக பிரிட்டனைச் சேர்ந்த ஜெனிவா மகாநாட்டுத் தலைவர் திரு. ஐவர் றிச்சேர்ட் மீண்டும் றொடீஷியப்பிரதமர் திரு. இயன் ஸ்மித்தைச் சந்தித்தும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

திரு. றிச்சேர்ட் தற்போது சுற்றுப்பயணம் செய்துவருகிறார்.

இதேவேளை திரு. ஸ்மித் றொடீஷிய விவகாரம் தொடர்பாக தமது அரசாங்க அதிகாரிகளுடன் விசேட பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

றொடீஷியாவில் இடைக்கால அரசொன்று அமைக்கப்படுவது தொடர்பான பிரிட்டனின் புதிய திட்டம்பற்றியும் திரு. றிச்சேர்ட் திரு. ஸ்மித்திடம் தெரிவிப்பாரெனக் கூறப்படுகிறது.

இப்புதிய திட்டத்தின்படி இடைக்கால அரசு றொடீஷியாவில் அமைக்கப்படும் பட்சத்தில் ஆதன்நீதி, பாதுகாப்புத் துறைகளில் பிரிட்டன் பிரதானபங்கு வகிக்கும். (ஸ்ரீ)

## சவூ. அரேபியாவில் பிரெஞ்சு ஜனதிபதி

பாரிஸ், ஜன. 24

பிரெஞ்ச் ஜனதிபதி நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

சவூதி அரேபிய மன்னரை சந்திக்கவுள்ள அவர் முடிக்குரிய இளவரசரை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

எண்ணெய் விலையுயர்வு, மத்திய கிழக்குப் பிரச்னை முதலான விடயங்கள் குறித்து இவர்கள் ஆராய்ந்ததாகக் கூறப்பட்டது. [ஸ்ரீ]

## பாக். தேர்தல்: பூட்டோநம்பிக்கை

ராவல்பிண்டி, ஜன. 24

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது ஆளும்கட்சியே பெரும்பான்மைப் பலம்பெறும் என்று ராவல்பிண்டியில் நடைபெற்றதொரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலிபூட்டோ நம்பிக்கைதெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## ஜாப். தெ. கொரிய ஒப்பந்தம் ஏற்பாடு

டோக்கியோ, ஜன. 24

ஜப்பானும், தென்கொரியாவும் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளவிருக்கின்றன.

இதேவேளை, ஜப்பான் பிரதமர் திரு. புக்குடா அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடத்தி கடலெல்லைகள் குறித்து தென்கொரியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவிருப்பதாக அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மாட்டிறைச்சிக்கடை மூடப்பட்டது

சங்கானை, திங்.

சங்கானை பட்டினசபை எல்லைக்குள் செயற்பட்டுவந்த மாட்டிறைச்சிக் கடை இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானத்தைப் பட்டினசபை நிறைவேற்றியுள்ளது.

மாட்டிறைச்சிக்கடை பூட்டப்பட்டமையிட்டு பல சமூக சேவா சங்கங்கள் பட்டின சபைக்கு பாராட்டு தெரிவித்துள்ளன. [அ]

### எகிப்துக்கு

## 50 லட்சம் தொன் உணவு சூடான் வழங்கும்

கெய்ரோ, ஜன. 24

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எகிப்துக்கு சூடான் 50 லட்சம் தொன் உணவுப் பொருட்கள் வழங்கவுள்ளது.

இதேவேளை எகிப்தின் பொருளாதாரத்தை சீர்படுத்த ஜனாதிபதி அன்வர் சதாத் தமது அதிகாரிகளுடன் திட்டம் ஒன்றினை வகுத்து வருகிறார். (ஸ்ரீ)

## ஜோர்டான்-எகிப்து நட்பு வலுவுறும்

அம்மான், ஜன 24

ஜோர்டான் மன்னர் ஹூசெயினும், எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தும் பாரம்பரியமான நட்புறவையும், நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொள்வதென்று தீர்மானித்துள்ளனர்.

அம்மானில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டது. [ஸ்ரீ]

## நேதாஜியின் 80 வது பிறந்த தினம்

புதுடில்லி, ஜன. 24

இந்திய விடுதலை வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 80 வது பிறந்ததினவிழா நேற்று இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டது. (உ)

## நம்பூதிரிபாட் கோரிக்கை

புதுடில்லி, ஜன 24

"அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு நம்பூதிரிபாட் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ் வேண்டுகோளை விடுத்தார். [ஸ்ரீ]

